R 5838 (page 27)

# திரும்பக்கொடுத்தலைப் பற்றின தூய. பேதுருவின் பிரசங்கம்

## ST. PETER'S SERMON ON RESTITUTION

முடவனை குணமாக்குதல். அப்போஸ்தலர்கள் தங்களை பொருட்படுத்தாம், இயேசுவின் வல்லமையாலேயே நடந்து என்று இயேசுவை கனப்படுத்தினர். ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர். இயேசுவை கொலை செய்த தேசம் பாவத்திற்குள்ளானதையும் உள்ளப்பூர்வமாக அவர்களை மன்னித்து, ஆசீர்வதிக்க தேவனது இரக்கம் அவர்கள்மேல் இருப்பதையும், பேதுரு தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுட்டிக் காண்பிக்கிறார். பிரதானமான இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் உடனடியாக மனம்வருந்தவேண்டும் - அதன்பிறகு "மறுசீரமைப்பின் காலங்கள்" பின்தொடரும். அக்காலங்களைக் குறித்து எல்லா தீர்க்கதரிசிகளும் உரைத்தனர் - சபை உத்தியோகஸ்தர் அதிர்ச்சிக்குள்ளாயினர்

திறவுகோல் வாக்கியம் : "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" - அப்போஸ்தலர் 3:19-21

பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவியைப் பெறும்பொழுது, பயத்தின் ஆவியைப் பெறாமல், தெளிந்த புத்தியும் பலமும், உற்சாகமும் உள்ள ஆவியைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் தங்களது மீட்பரால் சுவிசேஷசெய்தியை பிரசங்கிக்கும் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த செய்திமூலம் யூதர்களிலிருந்தும் மற்றும் ஒவ்வொரு தேசத்திலிருந்தும் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யும் ஜனங்களை ஒன்றுசேர்க்கவும், அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு தேவ புத்திரராகும்படியும், இதன் முடிவாக மணவாட்டிகளாக ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும் அவரது ராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகவும் முடியும்.

தூய பேதுருவும், தூய யோவானும் உற்சாகத்தால் நிறைந்தவர்களாய், அப்போஸ்தலருக்குள் பிரதானிகளாக இருந்து, ஜெபிக்க தேவாலத்துக்கு சென்றனர். தேவனிடத்தில் ஜெபம் ஏறெடுக்க தேவாலயம் சரியான இடம் என்று நீண்ட நாட்களாக கடைப்பிடித்துவந்ததால் அல்ல, மாறாக ஜனங்களை சந்திக்க அது ஒரு நல்ல இடம் என்று அறிந்திருந்ததாலேயே சென்றனர். அங்கே மிக பக்தியுள்ள யூதர்களை தாங்கள் சந்திக்கும்படியும், நற்காரியங்களை சோதித்துஅறியவும் ஒரு வாய்ப்பைதர, கர்த்தர் கொண்டுவருவார் என ஒருவேளை அவர்கள் எதிர்பார்த்திருக்கக்கூடும்.

அந்த வாய்ப்பு விரைவில் வந்தது. ஒரு தரித்திரனை அவர்கள் கண்டு, அவன் சப்பாணி என்றாலும் தேவனிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டிருந்ததை புரிந்துகொண்டனர். பேதுரு அவனை உற்றுப்பார்த்து, "எங்களை நோக்கிப்பார்" என்றார்.

அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் ஆதாயம் கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான். ஆனால் தூய தேதுருவோ, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை,

என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன், நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று கொல்லி" (6ம் வசனம்) அந்த சப்பாணி, பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தினால் வியப்படைந்து, அவனிடத்தில் விசுவாசம் இருந்ததால், கட்டளைக்குக் கீழ்ப்படிய முயற்சி மேற்கொண்டான். கீழ்ப்படிவதற்கு அவன் போராடுவதைக்கண்ட தூய பேதுரு, தன் வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டு, அவன் தன் விசுவாசத்தை வெளிப்படுத்த உதவினார். தேவனுடைய ஆசீர்வாதம் அவனை மேற்கொண்டது. நீண்ட நாட்களாக பலவீனமாக இருந்த அவனது பாதமும், அவனது கணுக்கால் மூட்டுக்களும் பெலன் கொண்டது. அவன் நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். இந்த மனுஷர்கள் மூலமாக தேவனது இரக்கம் தனக்கு அளிக்கப்பட்டது என்று அவன் சாட்சிபகன்றான்.

## கவனத்தில் கொள்ளவேண்டிய மறுசீரமைப்பின் பிரசங்கம்

யூத ஜனங்கள் எல்லாரும் பிரமித்து, தேவாலய மண்டபத்தில் கூடிவந்தார்கள். அச்சமயத்தில் கர்த்தருக்கு சாட்சியாக இருக்கும்படி தூய. பேதுருவுக்கு மாபெரும் பிரசங்கம் ஆற்ற வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது அவர் ஜனங்களை நோக்கி - "இஸ்ரயேலரே நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? நாங்கள் விசேஷமான தேவ தயவினாலே இதைச் செய்தோம். நாங்கள் இந்த மனிதனை குணமாக்கினதுபோல் உங்கள் பரிசேயரோ, சதுசேயரோ இவனை குணமாக்க முடியவில்லையே" என்று பெருமையினாலோ, ஆணவத்தினாலோ நிறைந்து பேசாமல், சாந்தத்தோடும் தாழ்மையோடும் எடுத்துரைத்தார். நாங்கள் எங்களுடைய விசேஷமான பரிசுத்தத்தினால் இந்த அறுபுதத்தைச் செய்தோம் என்று எண்ணி, எங்களை ஏன் நோக்கிப் பார்க்கிறீர்கள்? நாங்கள் தேவனுடைய கருவிகளாக இருந்ததால், இயேசுவின் மூலமாக தேவ இரக்கம் வெளிப்பட்டிருக்கிறது. உலகின் பாவங்களுக்காக மரித்த நம் மீட்பராகிய இயேசுவின் நாமத்தில் இந்த அற்புதம் நடத்திருக்கிறது.

இரட்சகரை நயவஞ்சகமாக தேசம் சிலுவையிலறைந்து என்று தம் பிரசங்கத்தை கேட்போரிடத்தில் பேதுரு மொழிந்தார். ஆனாலும் தேவ இரக்கம் அவர்கள்மேல் இருப்பதை

**R5839 : page 27**

அவர்களுக்கு அவர் வாக்குறுதியளித்தார். அவர்கள் இன்னும் மனம் வருந்தவும், தேவதயவுக்கு திரும்பவும் வேண்டுமென்றும் தீர்மானமாக உரைத்தார். ஆனால் இந்த தீயசெயலைச் செய்தவர்களோடு கொண்டிருக்கும் உறவையும் உரிமைகளையும் முற்றிலும் அவர்கள் களைந்துவிட்டு, கர்த்தரோடு நிலைநின்று, கர்த்தருக்காக ஜீவிக்கமுன்வரவேண்டும். தம் செய்தியை கேட்டவர்கள் ஏன் தேவனோடு ஞானஸ்நான உடன்படிக்கை செய்யவேண்டும் என்ற தெய்வீக திட்டத்தின் காரண்த்தை சுருக்கமாகவும், அதேசமயம் விலாவாரியாகவும் எடுத்துரைத்தார் (வசனங்கள் 13:26). அவர்கள் தங்கள் சொந்த பாவங்களுக்காகவும், மனம் வருந்துவதோடு, முழுமையாக மனமாற்றமடைந்து, அல்லது கர்த்தரை அறிய அவர் பக்கமாக திரும்பி, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் சிலுவையிலறைந்த இயேசுவின் பின்னடியார்களாக கர்த்தரால் அவர்களது பாவங்கள் மறைக்கப்பட்டு, தேவபிள்ளைகளாக இயேசுவின் மூலமாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவர். அவர்களது பாவங்கள் முற்றிலும் நீக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமையான சுபாவ மாற்றத்தை அடைவர் என்பதே இதன் இறுதி பலனாக இருக்கும்.

"கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும், ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் - 1கொரிந்தியர் 15:43,44.

பாவத்தின் கறைகளிலிருந்தும் அதன் அபூரணங்களிலிருந்தும் அவர்களது பாவங்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, எல்லாவற்றையும் மறுசீரமைக்கும் மகிமையான காலங்கள் வரவிருக்கிறது. இக்காலங்களைக் குறித்து தேவன் முற்காலங்களில் தம் பரிசுத்த தீர்க்கதரிசிகள் அனைவரின் மூலமாகவும் முன்னுரைத்திருந்தார். புத்துணர்ச்சியூட்டும் வருடங்கள் அல்லது காலங்கள் அதோடுகூட திரும்பக்கொடுக்கும் காலங்களாக ஆயிரம் ஆண்டுகள்

நீடிக்கும். தேவன் ஆபிரகாமுக்கும் இஸ்ரயேலருக்கும், மற்றும் எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் அளித்த வாக்குத்தத்தங்கள் அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கும். சரியாகக் கூறவேண்டுமானால், மேசியாவின் மகிமையுள்ள ராஜ்யத்தில் பூமி ஏதேன் நிலைமைக்கு கொண்டு வரப்படும். தேவனுடைய பாதஸ்தானம் மகிமைப்படுத்தப்படும் (ஏசாயா 60:13, 66:1). மனுக்குலத்தின் சாபம் சுருட்டப்பட்டு, அகற்றப்பட்டபிறகு, அவ்விடத்தில் கர்த்தரது ஆசீர்வாதம் வந்தடையும்.

திரும்பக் கொடுத்தல் வேதாகமத்தின் செய்தியாக ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை உள்ளதால், இந்த திரும்பக் கொடுத்தலின் காலங்களைக் குறித்து குறிப்பிடாத எந்த தீர்க்கதரிசியும், பரிசுத்த தீர்க்கதரிசியாக இருக்கமுடியாது என்று பரிசுத்தபேதுரு நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். உலகின் மீட்பரும், நம் குருவுமானவர் தம்மைக்குறித்து தீர்மானமாகக் கூறகிறார்:-

இதோ, நான் அனைத்தையும் புதிதாக்குகிறேன்" "இனி ஒருபோதும் சாபமுமில்லை" முடிவாக, அங்கே கவலை, கண்ணீர், மரணம் இல்லை. இந்த மகிமையான காரியங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்ட முழு ஆயிரம் வருடங்களும் தேவைப்பட்டபோதிலும், மேசியாவின் ராஜ்யத்தில் இவையனைத்தும் புதிதாக்கப்படும்.

## நிழலான மோசேக்கு நிஜமாயிருக்கிற மாபெரும் மோசே

விசேஷமான மேசியாவின் வகுப்பார் அழைக்கப்படுவதை மோசே முன்னுரைத்திருந்தை பரிசுத்த பேதுரு சுட்டிக்காண்பிக்கிறார் (உபாகமம் 18:17-19). இந்த வகுப்பாருக்கு இயேசுவே தலையாகிறார். இவர்களெல்லாரும் பரிசுத்தாஅவியில் ஜெனிப்பிக்கப்படுவதன் மூலம் தேவ குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக, சபையாக கருதப்படுகிறார்கள். இந்த மாபெரும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் மோசே ஆவார். இவர் பிதாக்களுக்கு கூறுகிறார்

"மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல (ஏன்னைக்காட்டிலும்) ஒரு (மாபெரும்) தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்" - அப் 3:22.

தேவன் முதலாவதாக இயேசுவை உயிரோடெழுப்பினார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதுமுதல், பெந்தெகொஸ்தே நாள்துவங்கி, சகோதரர்களை உயிர்த்தெழுப்பி வருகிறார். முதலாவது அப்போஸ்தலர்கள், அதன் பிறகு தேவனோக்கத்தின்படி கிறிஸ்துவின் சரீரமாகும்படி அழைக்கப்பட்ட அங்கங்களை, பரிசுத்தவான்களுக்கே உரித்தான் குணலடசணங்களை உடையோரை, மணவாட்டி வகுப்பார் என்று அழைக்கப்படுகின்ற அனைவரையும், கடந்த 1800 வருடங்களாக உயிர்த்தெழுப்பி வருகிறார். சபை வகுப்பார் முழுவதும் உயிர்த்தெழுப்பப்படும் வரை, இவர்கள் ஒன்றாக எழுப்பப்படுவது நிறைவேறாது.

கிறிஸ்துவும் அவரது சரீரமாகிய சபையுமாகிய, மாபெரும் நிஜமான மோசே உயர்த்தப்படும்போது, மகிமைப்படுத்தப்பட்டிருப்பார். அப்பொழுது உலக ஜனங்களுக்கான ஆசீர்வாதத்தின் காலம் துவங்கும். அக்காலத்தில் பொழியப்படும் திரும்பக்கொடுத்தலின் சிறப்புரிமைகள் அனைத்தின் மூலமாக, அவர்களது புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும். ஆயிரவருட அரசாட்சின்போது, யார் யாரெல்லாம் மாபெரும் தீர்க்கதரிசியின் சொல்

R5839 : page 28

கேட்கிறார்களோ, அவர்கள் உடலளவிலும், மனதளவிலும், ஒழுக்கரீதியிலும் மாபெரும் பரிபூரண் ஆசீர்வாதங்களை அடைவதோடு, நித்தியஜீவனையும் பெறுவர். ஆனால் மகிமையடைந்து மேசியாவாகிய அந்த மாபெரும் தீர்க்கதரிசியை தள்ளிவிடுபவன் எவனோ, புத்தியறிவின்படி தீயவர்களுக்குரிய பங்கை தெரிந்து கொண்டபடியால் ஜனத்திலிருந்து நிர்மூலமாக்கப்படுவான். "கர்த்தர்.. துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்".

கர்த்தரது ஆசீர்வாதம் ஆபிரமாமின் மாம்சீகப் பிள்ளைகளாகிய இஸ்ரயேலரை

ஆசீர்வதிப் பதில்தான் துவங்கினது என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். மெய்யாகவே இஸ்ரயேலரை இது ஒன்றுசேர்த்தது. அதன்பிறகு, யூததேசம் தேவ தயவிலிருந்து தள்ளப்பட்டு, புறஜாதிகளுக்கு கதவு திறக்கப்பட்டது. இந்த புறஜாதியார் கர்த்தரின் ஆசீர்வாதத்தை பெறும் வாய்ப்பை 1800 வருடங்களாக அடைந்திருக்கின்றனர். முன்குறிக்கப்பட்ட தெரிந்துகொள்ளப் பட்டாவர்களின் எண்ணிக்கை வெகுவிரைவில் மகிமையடைந்தவுடன், இந்த யுகமும், அதன் நோக்கங்களும் முடிவுக்குவரும். பிறகு திரும்பக்கொடுத்தலின் பணி ஆரம்பமாகும். அப்பொழுது மாம்சீக இஸ்ரயேலர் தெய்வீகதயவில் முதல் ஸ்தானத்தைப்பெற்று, இந்த திரும்பக் கொடுத்தலை முதலாவது அடைவர் என்று ரோமர் 11:25-32 வசனங்கள் விவரித்துள்ளதை வாசித்து அறிந்துகொள்வோமாக.

-----------------------------